ORIGINAL ARTICLE

# திருநாவுக்கரசர் தேவாரத்தில் மாயை : ஓர் ஆய்வு
# [THIRUNAVUKKARASAR THEVARATTHIL MAYAI – OOR AAIVU]

# A STUDY ON THE CONCEPT OF 'MAYA' IN THIRUNAVUKKARASAR THEVARAM SONGS

**பூங்கொடி முருகையா[1] / Poongkodi Murugaya[1]**

[1]உலு திராம் இடைநிலைப்பள்ளி, உலு திராம், ஜொகூர், மலேசியா. / Ulu Tiram Secondary School, Ulu Tiram, Johor, Malaysia. *மின்னஞ்சல்* / Email: m.poo_1404@yahoo.com

**ஆய்வுச் சாரம்**

*திருநாவுக்கரசர் தேவாரத்தில் மாயைக் கூறுகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். திருநாவுக்கரசரின் தேவாரத்தில் மாயைக் கூறுகள் திருவருட்பயன் உயிர்க்கோட்பாட்டின் அடிப்படையில் ஆராயப்பட்டது. திருநாவுக்கரசரின் நான்காம் திருமுறையிலிருந்து 42 பதிகங்களும் திருவருட்பயனின் உயிர்கோட்பாட்டின் அடிப்படையில் மாயைக் கூறும் இவ்வாய்வின் முதன்மை ஆதரங்களாக விளங்குகின்றன. இவ்வாய்வின் வழி திருநாவுக்கரசர் தேவாரத்தில் உயிர்கள் எவ்வகையான மாயைகளில் அகப்பட்டுள்ளனர் என்பது கண்டயறியப்பட்டுள்ளன. தேவர்களும் அசுரர்களும் ஆசை என்னும் மாயையில் அகப்பட்டுச் சிவப்பெருமானை நினையாமல் அமிர்தத்தைக் கடைய முற்படுதல், இறைவனை உணராமல் மாயையினால் திருநாவுக்கரசர் சமண மதம் சார்ந்தல், 'ஆசை' என்னும் மாயையில் அகப்பட்டு உயிர்கள் மீண்டும் மீண்டும் ஆசையைப் பற்றி வாழ்க்கை கொண்டு நகர்தல், 'உலகப் பொருள்', 'மனைவி', 'சுற்றம்' என்னும் மாயையால் அகப்படுதல், ஐம்பொறிகளால் ஏற்படும் மாயை, கோபம் வடிவிலான மாயை, 96 தத்துவங்களால் ஏற்படும் மாயை போன்ற கூறுகள் திருநாவுக்கரசர் தேவாரத்தில் உள்ளன எனக் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாய்வு சிந்தாந்த கூறுகளை இணைந்து தேவாரப் பாடல்களைக் கண்ணோட்டமிட துணைபுரிகின்றது எனக் கூறலாம்.*

***கருச்சொற்கள் : திருநாவுக்கரசர், மாயை, திருவருட்பயன், சிவப்பெருமான், உயிர்க்கோட்பாடு***

**Abstract**

This study aimed to analyse the concept of Maya in Thirunavukkarasar's song. The theory of soul put forward in the Thiruvarudpayan was used for this study. 42 pathikam from 4th volume of Thirumurai and Thiruvarupayan's soul concept were used as the primary source for this study. This study emphasizes on the varieties of Maya in a soul. Thevergal and Asurargal forget Lord Shiva due to a desire, which is a kind of Maya, while trying to get Amirtham. Because of this Maya, Thirunavukkarasar converts to Jainisme. Furthermore, souls caught in the trance of Maya

unable to move on with its life as the souls are caught in Maya due to attachment to ‘living things’, ‘family’, ‘relations’, and ‘anger’. These Maya’s are formed by 96 thathuvam and five sensory organs. In conclusion, many songs of Thirunavukkarasar contain the concept of Maya. The implication of this study will result in a deeper realization of religious elements among the Hindu devotees.

**Keywords**: Thirunavukkarasar, Maya, Thiruvarudyan, Lord Shiva, Soul concept

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 15th January 2018, revised 20th March 2018, accepted 01th June 2018

## முன்னுரை

உலகில் தோன்றிய சமயங்களெல்லாம் மக்களிடம் தோன்றும் குறைகளைக் களைந்து, வாழ்க்கை முறைகளை நெறிப்படுத்தும் நோக்கங்கொண்டவை ஆகும். இவற்றில் மிகவும் தொன்மை வாய்ந்த சமயமாகக் கருதப்படுவது சைவ சமயம் (ஆறுமுக நாவலர்கள், *1986)*[1]. சைவ சமய புனித நூல்களின் இரு பெரு பிரிவுகளாக விளங்குவன தோத்திரங்களும் சாத்திரங்களும் ஆகும். இவை இரண்டுமாக இறைவன் இருக்கிறான் என சைவ சமயம் கூறுகின்றது. இதனையே, திருநாவுக்கரசர் தமது தேவாரத்தில்,

தோத்திரமும் சாத்திரமும் ஆனாய் தாமே

(திருமுறை 6 : 778)[2]

என்கிறார். சைவத் திருமுறைகள் பன்னிரண்டினும் பரவி விரவிக்கிடக்கும் அரிய பெரிய தத்துவ உண்மைகளையே, சைவசித்தாந்த என்னும் பெயரால், மெய்கண்டார் முதலிய சைவசந்தானாசிரியர்கள் தொகுத்தருளினர். எள்ளினின்று எண்ணெய் எடுப்பதுபோல, நமது சைவநாயன்மார்களின் வாழ்க்கையினின்றும், வாய்மொழிகளின்றுமே, சைவ சித்தாந்தத் தத்துவக் கோட்பாடுகள், உருவாக்கப் பெற்று வரையறைச் செய்யப்பெற்றன (முருகவேள், *1984*)[3].

சாத்திர நூல்களில் ஒன்று திருவருட்பயன் ஆகும். திருவருட்பயனில் கூறப்பட்டுள்ள முப்பொருள்களில் ஒன்றான உயிரின் கொள்கையின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள மாயை ஒட்டிய கூறுகளைத் திருநாவுக்கரசர் தேவாரத்தில் ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

### சைவ சித்தாந்தம்

*சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு ஆகும். சைவத்தின் சித்தாந்தம் அல்லது கொள்கையே, பொதுவாகச் சைவ சித்தாந்தம் என வழங்கப்படும் (முருகவேள், 1984)[3]. சைவ சிந்தாந்தம் பதி, பசு, பாசம் என முப்பொருள்களை நித்தப் பொருள்களாகக் கொள்கிறது (கோகுல், 2009)[4]. சாத்திரங்களில் தலையானது மெய்கண்ட சாத்திரங்கள் ஆகும் (சிவஞானம், 2015)[2]. மெய்கண்ட சாத்திரங்கள் வரிசையில் திருவருட்பயன் நூல் இடம்பெறுகின்றது.*

### திருநாவுக்கரசர் தேவாரம்

*தமிழ்த் தோத்திரங்கள் வரிசையில் பன்னிருத்திருமுறைகள் இடம்பெறுகின்றன. இவ்வரிசையில் திருநாவுக்கரசரால் பாடப்பட்டத் தேவாரமும் அடங்கும். திருநாவுக்கரசர் அருளியவற்றுள் 312 பதிகங்கள் மட்டுமே கிடைத்துள்ளன. 'திருத்தாண்டகம்' என்னும் யாப்பு அமைய, பாடப்பட்ட 99 பதிகங்களை '6ஆம் திருமுறை' என்றும், 'திறுக்குறுந்தொகை' என்னும் யாப்பு அமைய பாடப்பட்ட 100 பதிகங்களை, '5ஆம் திருமுறை' என்றும், ஏனைய பாடல்கள் 113 பதிகங்களை '4-ஆம் திருமுறை' என்றும் வகுக்கப்பட்டுள்ளது (சிவஞானம், 2015)[2].*

### திருவருட்பயனில் மாயை

*'மாயை' எனப்படுவது பொய்த் தோற்றம் எனக் கழகத் தமிழ் அகராதி குறிப்பிடுகின்றது (கழகப் புலவர் குழு, 2010)[6]. உலகில் பலவகையாகக் காணப்படும் பொருள்களாகப் பரிணமிக்கக் கூடிய பலவகைச் சக்திகளின் தொகுதியே மாயை எனப்படுவது என்றும் கூறப்படுகின்றது (சுப்புரெட்டியார், 2010)[7]. மேலும், மாயை உயிர்க்கு மறைத்தலைச் செய்யும் என்றும், பிரம்மம் உலகமாகத் தோன்றுவதை விளக்கும் தத்துவம் மாயை என்றும் கூறுவர் (ஞானப்பூங்கோதை, 2015)[9] .*

*மாயை என்பதற்குச் சைவ சித்தாந்த அடிப்படையில் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. 'மா' என்பது ஒடுக்கத்தையும் 'யா' என்பது விரித்தலையும் குறிக்கின்றன. எம்மூலப் பொருள்களிலிருந்து உலகங்களும் பொருள்களும் தோன்றுகின்றனவோ எம்மூலப் பொருளில் ஈற்றில் ஒடுங்குகின்றனவோ அம்மூலப் பொருள் மாயை எனப்படும் (சங்கரப்பிள்ளை, 1985)[8].*

*திருவருட்பயன், பெரு மயக்கத்தைச் செய்வதாகிய பிரகிருதி மாயையே உலகமாகப் பரிணமித்துச் சகலராகிய உயிர்களோடு தொடர்பு கொண்டுள்ளது என்றும் உடம்பும், உடலிலுள்ள ஐம்பொறிகள் மனம் முதலிய கருவிகளும், உடம்போடு கூடிய உயிர்கள் போக்கு வரவு புரிதற்குரிய நிலமும், நிலத்திற் காணப்படும் சிறியனவும் பெரியனவும் ஆகிய நுகர்ச்சிப் பொருள்களும் ஆகிய எல்லாம் அம்மாயையின் காரியங்களேயாகும் எனக் குறிப்பிடுகின்றது (ஆனந்தராசன், 2013)[5].*

இதனையே, உமாபதியார் திருவருட்பயனில்,

மூன்று திறந்து உள்ளாரும் மூலமலத்து உள்ளார்கள்
தோன்றலர் தொத்து உள்ளார் துணை

(பாடல்: 13)[11]

மூவகைப்பட்ட உயிர்களும் ஆணவத்தில் அகப்பட்டுள்ளார்கள். அவர்களுள் மாயைப் பிணிப்புள்ள சகலரே தமக்குத் துணையாக உள்ள இறைவனை உணரப் பெறாது மயங்கி நிற்பர் என்று பொருள்படுகின்றது என்கிறார்.

**திருநாவுக்கரசர் தேவாரத்தில் மாயை**

மாயை சிந்தனை திருநாவுக்கரசர் பாடலில் வெளிக்காட்டியுள்ளார். அவர்,

எண்ணாது அமரர் இரக்கப் பரவையுள் நஞ்சைஉண்டாய்
திண்ணார் அசுரர் திரிபுரம் தீஎழச் செற்றவனே

(திருமுறை 4:919)[2]

என்று பாடியுள்ளார். தேவர்களும் அசுரர்களும் பார்க்கடலின் அமிர்தத்தை உண்டால் இளமையுடன் மரணமின்றி வாழ முடியும் என்ற ஆசையினால் பார்க்கடலைக் கடைந்தனர். ஆசை என்னும் மாயைக்குத் தேவர்களும் அசுரர்களும் வசப்பட்டுள்ளனர் என்று இப்பாடல் வரி உணர்த்துக்கின்றது.

உறுகயிறு ஊசல் போல
ஒன்றுவிட்டு ஒன்று பற்றி
மறுகயிறு ஊசல் போல
வந்துவந்து உலவும் நெஞ்சம்

(திருமுறை 4: 264)[2]

இப்பாடலில் கயிற்றைப் பற்றி நிற்கும் ஊஞ்சல் பலகை போல, உயிர் ஓர் எண்ணத்தைப் பற்றி நின்று அதில் முன்னும் பின்னுமாக அலைகிறது என்று கூறுகிறார். இப்பாடல் உயிர் உலகப் பொருள் ஆசை என்னும் மாயையில் அகப்பட்டு உலகில் நகர்வதை உணர்த்துகின்றது.

கழித்திலேன் காம வெந்நோய்
காதன்மை என்னும் பாசம்
ஒழித்திலேன்

(திருமுறை 4: 265)[2]

இப்பாடலில் திருநாவுக்கரசர் உலகர் நிலையைத் தன் மேல் கொண்டு, தனக்கு ஆசை என்னும் பற்று இன்னும் ஒழியவில்லை என்கிறார். இக்கூற்றின் வழி, உயிரிடம் மாயையின் வடிவமான ஆசை உயிர்களைப் பற்றியுள்ளது என உணர்த்தப்படுகின்றது.

திருநாவுக்கரசர் உலக மக்கள் நிலையைத் தன் மேல் கொண்டு, அரப்பணி செய்ய விடாத சுற்றம் என்னும் துன்பத்துக்குள் மூழ்கிக் கிடக்கிறேன் எனக் குறிப்பிடுகின்றார். சுற்றம் என்பது உற்றார்கள் எனும் மாயை. இதனுள் உயிர்கள் மயங்கி கிடக்கும் நிலையைச் சுட்டுவதைக் கீழ்க்காணும் பாடல் உணர்த்துகின்றது.

பணிவிடா இடும்பை என்னும்
பாசனத்து அழுந்து கின்றேன்

(திருமுறை 4: 267)[2]

இதனையே அவர்,

கேட்டி லேன்கிளை பிரியன்

(திருமுறை 4: 231)[2]

என்ற பாடலிலும் தீவினையால் வந்து சேர்ந்த சுற்றத்தை விட்டுப் பிரியவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

தலைசுமந்து இருகை நாற்றித்
தரணிக்கே பொறைஅது ஆகி
நிலைஇலா நெஞ்சம் தன்னுள்
நித்தலும் ஐவர் வேண்டும்
விலைகொடுத்து அறுக்க மாட்டேன்
வேண்டிற்றே வேண்டி எய்த்தேன்''

(திருமுறை 4: 670)[2]

என்ற பாடல் அடிகள், நாள்தோறும் ஐம்பொறிகள் செல்லும் வழியிலே செல்வதாகவும். அதன் தொடர்பினை அறுத்துக் கொள்ள முடியாத நிலையில் இருப்பதாகத் திருநாவுக்கரசர் கூறுகின்றார். மேலும், ஐம்பொறிகள் விரும்பியதையே தான் விரும்பி செய்வதாகக் கூறுகின்றார். இக்கூற்று, ஐம்பொறிகளானவை, உயிர்களை மயக்குகின்றன எனப் புலப்படுத்துகின்றன.

இதனையே,

மாச்செய்த குரம்பை தன்னை
மண்இடை மயக்கம் எய்து
நாச்செய்த நாலும் ஐந்தும்
நல்லன வாய்தல் வைத்துக்
காச்செய்த காயம் தன்னுள்
நித்தலும் ஐவர் வட்னு
கோச்செய்து குமைக்க ஆற்றேன்
கோவல்வீ ரட்ட னீரே

(திருமுறை 4 : 674)[2]

ஐவரால் ஆட்டப் பட்டேன்

(திருமுறை 4 : 495)[2]

கூவல்தான் அவர்கள் கேளார்
குணம்இலா ஐவர் செய்யும்
பாவமே தூர நின்றார்"

(திருமுறை 4 : 355)[2]

ஐவரால் அலைக்கப்பட்ட
ஆக்கைகொண்டு அயர்த்துப் போனேன்

(திருமுறை 4: 404)[2]

என்ற பாடல் வரிகளும் உயிர்களுக்கு மாயை ஐம்பொறிகளால் ஏற்படுகின்றது என்பதை நிரூப்பிக்கின்றன.

நிணத்திடை யாக்கை பேணி
நியமம்செய்து இருக்க மாட்டேன்
மணத்திடை ஆட்டம் பேசி
மக்களே சுற்றம் என்னும்
கணத்திடை ஆட்டப் பட்டுக்
காதலால் உன்னைப் பேணும்
குணத்திடை வாழ மாட்டேன்
கோவல்வீ ரட்ட னீரே

(திருமுறை 4 : 677)[2]

என்ற பாடலில் திருநாவுக்கரசர், திருமணம் என்னும் உலக வாழ்க்கை நாடகத்தை உயர்த்திப் பிடித்து, மக்கள், சுற்றம் என்னும் கூட்டத்தாரால் ஆட்டி அலைக்கழிப்படுவதாகக் குறிப்பிடுகின்றார். இதன் வழி, ஓர் உயிரானது, திருமணம் என்னும் உலக வாழ்க்கை, மக்கள், சுற்றம் போன்ற வடிவில் அமைந்து மாயையுள் மயங்குவதைச் சுட்டுகின்றது.

மாலினாள் அணங்கை அஞ்ச
மதில்இலங் கைக்கு மன்னன்
வேலினான் வெகுண்டு எடுக்க
காண்டலிம் வேத நாவன்
நூலினான் நோக்க நக்கு
நொடிப்பதோர் அளவில் வீழ்க்
காலினால் ஊன்றி இட்டார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே

(திருமுறை 4 : 303)[2]

என்ற பாடலில் திருநாவுக்கரசர், இராவணன் தான் செல்லும் ஆகாய வழியில் கயிலை மலைக் குறிக்கிட்டு இருப்பதால், கோபங்கொண்டு அம்மலையைப் பெயர்க்க முற்பட்டான் என்றும் சினங்கொண்ட சிவபெருமான் இராவணனை மலையின் கீழ்ச் சிக்கிக் கொள்ளுமாறு, கால் பெருவிரலை ஊன்றி அழுத்தினார் என்று குறிப்பிட்டுள்ளார். இதன் வழி இராவணனை 'மாயை' கோபம் வடிவில் ஆட்க்கொண்டது உணர்த்தப்படுகின்றது.

எண்பதும் பத்தும் ஆறும்
என்உளே இருந்து மண்ணிக்
கண்பழக்கு ஒன்றும் இன்றித்
கலக்கநான் அலக்க ழிந்தேன்

(திருமுறை 4 : 681)[2]

என்ற பாடலில் திருநாவுக்கரசர் தான் 96 தத்துவங்களின் ஆளுமையால் துன்புறுத்தப்பட்டதாகப் பாடியுள்ளார். இதன் வழி, உயிர்கள் 96 தத்துவங்களின் வடிவில் மாயையிள் அகப்பட்டுள்ளதைப் பாடல் சுட்டுகின்றது.

மண்ணுளே திரியும் போது
வருவன பலவும் குற்றம்
புண்ணுளே புரைபு ரையன்
புழுதிப்பொதி பொள்ளல் ஆக்கை

(திருமுறை 4 : 686)[2]

உலக வாழ்க்கையில் உயிர்கள் மனைவி மக்கள், என்று உறவாகிய கூட்டத்தினரைப் பெருக்கிக் கொண்டு வஞ்சனையுள் மூழ்கி வாழ்கின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார். இவ்வரிகள் மாயையானது மனைவி, மக்கள் என்ற உறவுகளின் வடிவில் உயிர்களுக்கு ஏற்படுவதைக் கீழ்க்காணும் பாடலில் திருநாவுக்கரசர் சுட்டியுள்ளார்.

சவைதனைச் செய்து வாழ்வான்
சலத்துளே அழுந்து கின்ற
இவை ஒரு பொருளும் அல்ல

(திருமுறை 4 : 415)[2]

மேலும்,

மாழைஒண் கண்ணி னார்கள்
வலைதனில் மயங்கு கின்றே

(திருமுறை 4 : 493)[2]

என்ற பாடலில் உலகர் நிலையைத் தன் மேல் கொண்டு, உயிரானது அழகியதும் ஒளி பொருந்தியதும் ஆகிய கண்ணினை உடைய மாதர்களது மாயவலையில் வீழ்ந்து கிடப்பதாகப் பாடியுள்ளார். மாதர்களின் அழகிய ஒளி பொருந்திய கண்கள், உயிர்களை மயக்கும் மாயை என்பது குறிப்பிடப்படுகின்றது.

## முடிவுரை

திருநாவுக்கரசர் தேவாரத்தில், திருவருட்பயன் அடிப்படையிலான உயிரின் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மாயை ஒட்டிய சிந்தனை வெளிப்பட்டுள்ளதை இக்கட்டுரையின் வழி காண முடிந்தது. உயிர்கள் மாயையுள் அகப்பட்டுத் துன்பப்படுவதைத் திருநாவுக்கரசர் தேவாரம் உணர்த்துகின்றது. மேலும், உயிர்கள் மாயையிலிருந்து விடப்பட சிவபெருமானைச் சரணடைய வேண்டும் என்ற கருத்தினை இவ்வாய்வின் வழி உணரலாம்.

**மேற்கோள் நூல்கள்**


1. *Aaarumuga Naavalavarkal (1986). Myth of Thirunavukarasar Nayanar (திருநாவுக்கரசர் நாயனார் புராணம்).* Chidambaram*:* Sri Velan Press Publications.
2. Sivanyanam, V. (2015). *Thirunavukarasar Devaram – Part I* (*திருநாவுக்கரசர் தேவாரம் - முதல் பகுதி*). Coimbatore: Vijaya Publications.
3. Murugavel, N, R. (1984). *Saivasitantham (சைவசித்தாந்தம்).* Chennai: Sekkizhar Publications.
4. Gogul, R. (2009). *'Pasu' in Saiva Sithantham (சைவ சித்தாந்த நோக்கில் 'பசு'). Bakthi Repository*, 5 (1), 9-14.
5. *Anadharasan, A.. (2013). Sivaneri Thirukurral as Thiruvarutpayan by Umapathi Sivanaar* (*உமாபதி சிவனார் அருளிய சிவநெறித் திருக்குறள் எனும் திருவருட்பயன்).* Chennai: Narmatha Publications.
6. Kalaga Pulavar Group. (2010). *Kalaga Tamil Dictionary (கழகத் தமிழ் அகராதி).* Chennai: Appar Publications.
7. Suppurettiyar, N. (2010). *Saivasithantham an Introduction (சைவ சித்தாந்தம் ஓர் அறிமுகம்).* Chennai: Poompuhar Publications.
8. Shankarapillai, P. (1985). *Saivasitantham (சைவசித்தாந்தம்).* Chennai: Devaneya Publications.
9. Nyanapungotai, M. (2007). *Saivasithantham Skills (சைவசித்தாந்தத் திறன்).* Madurai: Namashivaya Publications.



***Citation in Tamil***
பூங்கொடி முருகையா. (2018). திருநாவுக்கரசர் தேவாரத்தில் மாயை : ஓர் ஆய்வு. *மூவாலிம் சமூக அறிவியல் மற்றும் மனிதவியல் ஆய்விதல், 2*(3), 196-203.

***Citation in Tamil @ Romanised***
Poongkodi Murugaya. (2018). Thirunavukkarasar thevaratthil mayai – Oor aaivu. *Muallim Journal of Social Sciences and Humanities, 2*(3), 196-203.

***Citation in English***
Poongkodi Murugaya. (2018). A study on the concept of maya in Thirunavukkarasar thevaram songs. *Muallim Journal of Social Sciences and Humanities, 2*(3), 196-203.